செ.கு. எண் : 80

நாள்: 20-07-2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 20.7.2011

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி நகரம் திரேஸ்புரம் கடல் பகுதியிலிருந்து 18.7.2011 அன்று கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற படகு எண். TN 12 FRPV 1028, திரேஸ்புரம் கடல் பகுதியிலிருந்து சுமார் 8 கடல் மைல் தொலைவில் சேதமடைந்ததில், அப்படகில் சென்ற ஐந்து நபர்களில் திரு. சிலுவை என்பவரின் மகன் திரு. இன்னாசி, திரு. ரெக்ஸ் என்பவரின் மகன் திரு. டைசன் ஆகிய இருவரும் கடலில் மூழ்கி காலமானார்கள். மேலும், அப்படகில் சென்று காணாமல் போன திரு. சாமி என்கிற அந்தோணிசாமி மற்றும் அல்பர்ட் ஆகிய இருவரையும் தேடும் பணியில் ஈடுபட்ட போது, அவர்களது உடல்கள் 20.7.2011 அன்று கடலில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. சிலுவை என்பவரின் மகன் திரு. இன்னாசி, திரு. ரெக்ஸ் என்பவரின் மகன் திரு. டைசன் ஆகிய இருவரின் குடும்பங்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்க உத்தரவிட்டதைப் போன்று, திரு. சாமி என்கிற அந்தோணிசாமி மற்றும் அல்பர்ட் ஆகிய இருவரின் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்